018/DM/22

T-C: 43

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**I.** (அ) சரியான விடையைப் பொருத்திக் காட்டுக : (5 × 1 = 5)

1. வினையே ஆடவர்க்குயிர் – தாராபாரதி
2. முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை – குறுந்தொகை
3. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே – தொல்காப்பியர்
4. விரல்கள் பத்தும் மூலதனம் – திருக்குறள்
5. அறிவு அற்றம் காக்கும் கருவி – திருமூலர்

(ஆ) பின்வரும் நூலினையும், ஆசிரியர்களையும் பொருத்துக : (5 × 1 = 5)

1. தமிழ் வளர்ச்சி – குலசேகர ஆழ்வார்
2. கம்பராமாயணம் – பாரதிதாசன்
3. தேவாரம் – நல்லந்துவனார்
4. கலித்தொகை – திருநாவுக்கரசு
5. நாலாயிர திவ்யபிரபந்தம் – கம்பர்

**II.** பின்வரும் மரபுத் தொடர்களை வாக்கியத்தில் அமைக்க : (5 × 1 = 5)

1. கயிறு திரித்தல்
2. முதலைக் கண்ணீர்
3. வாழையடி வாழையாக
4. கானல் நீர்
5. அவசரக்குடுக்கை

[Turn over

III. பின்வரும் பகுதியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : (5 × 1 = 5)

தொன்டு செய்து பழுத்த பலம்

தூயதாடி மாற்பில் விழும்

மண்டடைச் சுரப்பை உளகு தொழும்

மனக்குகையில் சிருத்தை எழும்

IV. கீழ்வரும் பகுதிகளைப் பல வடிவங்களாக எழுதுக : (5 × 2 = 10)

1. இரு
2. தள்ளு
3. காட்டு
4. விடு
5. கொடு

V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : (5 × 1 = 5)

1. மரபுப் பிழையை நீக்குக.

   நரி பிளிறும்

2. வினை மரபுப் பிழைகளை நீக்குக.

   வேடன் அம்பு வீசி யானையை வீழ்த்தினான்.

3. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

   மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளக்குகிறது.

4. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

   காவிரிப்பூம்பட்டிணத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக் கிடந்தது.

5. பிற மொழிச் சொற்களை நீக்கி தமிழ்ச் சொற்களை எழுதுக.

   இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.

VI. வாக்கிய மாற்றம் செய்க : (5 × 1 = 5)

1. பாத்திமா திருக்குறள் கற்றாள்

   (பிறவினை வாக்கியமாக மாற்றுக)

2. குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

   (செயப்பாட்டு வாக்கியமாக மாற்றுக)

3. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும்"! என்றார்

(அயற்கூற்றாக மாற்றுக)

4. கலைச் செல்வி கட்டுரை எழுதினாள்

(எதிர் மறைத் தொடராக்குக)

5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன.

(கலவைத் தொடராக மாற்றுக)

**VII. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக :** (1 × 10 = 10)

குறிப்பு : கீழ்காணும் வினாவிற்கான விடை எழுதுவோர் தேவையான இடங்களில் XXXX, YYYY, ZZZZ என்னும் பொதுக்குறியீடுகள் தவிர கடிதத்தின் எந்தப் பகுதியிலும் வேறு எந்த விதக் குறிப்புகளையும் எழுதுதல் கூடாது. குறிப்பாக பெயர், முகவரி, ஊர், பதிவெண் ஆகியவை எழுதுதல் கூடாது. இவ்விதியை மீறும் விண்ணப்பதாரர்கள் நடைமுறை விதிகளில் கூறப்பட்டுள்ளவாறு தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.

1. பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டி கடிதம் எழுதுக.

2. பேருந்து வசதி வேண்டுமெனப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர்க்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

3. ஓய்வு பெறும் தமிழாசிரியரைப் பாராட்டி மடல் எழுதுக.

**VIII. பின்வரும் உரைநடைப் பகுதியைக் கருத்து சிதையாமல் மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக.** (1 × 10 = 10)

அண்ணல் அம்பேத்கார், இந்திய நாட்டின் ஒளி மிகுந்த எதிர் காலத்தைப் பற்றிக் கனவு கண்ட இலட்சிய மனிதர். தாம் கண்ட இலட்சியக் கனவுகளை அறிவுத்திறத்தினால் உறுதிப்படுத்தியவர். அவர், உயரிய ஆளுமைத் திறனைக் கொண்டவர்; கூர்த்த அறிவுவன்மை உடையவர்; மனித உரிமைக்காக உழைத்தவர். சமுதாயமெனும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அவர். கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது என்று உரைத்தவர். அவர், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.


[Turn over

IX. பின்வரும் தலைப்புகளில் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் 400 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை வரைக. (இரண்டு பக்கங்கள்) (2 × 10 = 20)

1. (அ) நீ விரும்பும் கவிஞர்

(அல்லது)

(ஆ) மாணவரும் சமுதாயத் தொண்டும்

2. (அ) சிக்கனமும், சிறுசேமிப்பும்

(அல்லது)

(ஆ) பெண் கல்வி

X. பின்வரும் பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (10 × 2 = 20)

அயோத்தி நாட்டு மன்னன் தசரதனுக்கு மக்கள் நால்வர். தசரதரன் தன் மூத்த மகன் இராமனுக்கு முடிசூட்ட விழைந்தான். தசரதன் மனைவி கைகேயி; அவன் தோழி மந்தரை. இராமன் முடிசூடுவதனை விரும்பவில்லை. எனவே, கைகேயின் மனத்தை மந்தரை வஞ்சக உரைகளால் மாற்றினாள். மனம் மாறிய கைகேயி தசரதனிடம் தான் பெற்ற இருவரங்களைப் பயன்படுத்தி இராமன் காடு செல்லவும், தன் மகன் பரதன் நாடாளவும் வேண்டுமெனக் கூறினாள்.

மணிமுடி சூடப் புறப்பட்டு வந்த இராமனிடம் கைகேயி, “நீ பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல வேண்டும். இது மன்னன் ஆணை” என்றாள். அதனை இராமன் பணிவுடன் ஏற்றான். தன் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்றான். செல்லும் வழியில் கங்கைக் கரையை அடைந்தான். அங்கே அன்பே வடிவான வேடுவத் தலைவன் குகன், இராமனைச் சந்தித்தான்.

வினாக்கள் :

1. அயோத்தி நாட்டை ஆண்ட மன்னன் யார்?
2. கைகேயியின் தோழி யார்?
3. தசரதன் யாருக்கு முடிசூட்ட விழைந்தான்?
4. தசரதனின் இளைய புதல்வன் யார்?
5. கைகேயி தசரதனிடம் பெற்ற வரங்கள் எத்தனை?
6. இராமனின் தம்பி யார்?
7. வேடுவன் தலைவன் யார்?
8. இராமன் எத்தனை ஆண்டுகள் காடு செல்ல வேண்டும்?
9. மந்தரையின் வஞ்சக உரையால் மனம் மாறியவர் யார்?
10. இராமன் குகனை எங்கு சந்தித்தான்?

---